கிராமங்களுக்குத் தனியாகப் பேருந்து வசதி செய்யத் தேவையில்லை. அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினா எண் 6, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.*

6—

குடியிருப்புகள்

13988—திரு. பி.கே. சேகர்பாபு:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், தண்டையார்பேட்டை பாரதி நகரில் 552 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு, கைவிடப்பட்ட இடத்தில் சாலையோரங்களில் வசிக்கும் மக்களுக்காக அக்குடியிருப்புகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் பாரதி நகர் என்ற பகுதியில் சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கலாம் என 1995 ஆம் ஆண்டு ஏழைகளின் காவலராக விளங்கும் மாண்புமிகு மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சுமார் 552 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க பரிந்துரை செய்யப்பட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2001 செப்டம்பர் 13]

2000-க்கும் மேற்பட்ட மக்கள் தற்போது சாலையோரங்களில் குடியிருந்து வருகின்றார்கள். அந்தச் சாலையேரர மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தால், மாண்புமிகு மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பெருமை கிடைத்துவிடும் எனக் கருதி அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டனர். எனவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நகர், தண்டையார்பேட்டை கிராமம், புலன் எண் 1844/2-ல் 4.57 ஹெக்டேர் நிலம் இருக்கிறது. இப்பகுதியில், தெற்கே இரயில்வே இருப்புப் பாதையும், மேற்கில் பக்கிங்காம் கால்வாயும், வடக்கு மற்றும் கிழக்கில் சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைகளும் அமைந்துள்ளன. தண்டையார்பேட்டை பாரதி நகர்ப் பகுதியில் 528 மாடிக் குடியிருப்புகள் கட்ட வரைபடம் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது. அத்திட்டத்திற்கான வரைபடம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கடித எண் ஏ4/16820/98, நாள் 10-2-1999-ல் இப்பகுதி பக்கிங்காம் கால்வாயிலேயிருந்து 100 மீட்டர் இடைவெளிக்குள் அமைந்துள்ளதால், கடல் ஓரப் பகுதியினுடைய ஒழுங்குமுறை விதிகளின்கீழ் பாதிக்கப்படுகிறது எனத் தெரிவித்து, வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மேலே கூறப்பட்ட காரணத்தால் இத்திட்டம் கைவிடப்பட்டது. இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கடந்தகால ஆட்சியிலே இந்தத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததா? என்ற வினாவை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற அணுகுச் சாலை 30 அடி அளவிலே இல்லாமல் இருக்கிற காரணத்தினாலே அந்த நிலத்திலே ஒரு பக்கத்திலே வீடுகள் கட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலே சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக மேம்படுத்தப்பட்டிருக்கிற குடிசைவாழ் மக்களிடத்திலே சென்று பேச்சுவார்த்தை நடத்தி அந்தச் சாலையை அகலப்படுத்தி இந்த ஆண்டு, அந்த திட்டத்தை எடுத்துக்கொள்வதற்குப் பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 13

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4.57 ஹெக்டேர் பரப்பளவுள்ள இடம் என்று கூறினார்கள். அதாவது 11.25 ஏக்கர் பெறுமானமுள்ள இடம் என்றார். அந்த இடத்தில் இரயில்வே இருப்புப் பாதையும், பக்கிங்காம் கால்வாயும், C.M.D.A. சட்டதிட்ட விதிகளுக்குட்பட்டு அந்த இடத்திலே வீடு கட்டுவதற்குப் போதுமான இடம் இருப்பதாக நான் அறிகிறேன். டாக்டர் இராதாகிருஷ்ணன் தொகுதியிலுள்ள அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அந்த இடம் குடியிருப்பு கட்ட சாத்தியமான இடம் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட, நேரிலே வந்து ஆய்வு செய்ய வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூட்டிக்கொண்டு செல்ல வேண்டியது தானே? இதிலே ஒன்றும் இல்லையே? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வினாவை இந்த மாமன்றத்திலே எழுப்புவதற்கு முன்னாலேயே என்னிடத்திலே இந்தக் கோரிக்கையை வைத்திருந்தால் நான் அவரோடு நேரடியாக சம்பந்தபட்ட அனைத்துத் துறைகளினுடைய அதிகாரிகளையும் அழைத்துச் சென்று பார்வையிட்டு இதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர் எப்போது அழைத்தாலும் அவருடைய தொகுதியிலுள்ள அந்த இடத்தைப் பார்வையிடுவதற்கு நானும் சம்பந்தப்பட்ட துறையினுடைய அதிகாரிகளும் வரவிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, அமைச்சர் வருகிறேன் என்று சொல்லிவிட்டார், அப்புறம் என்ன விடுங்களேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து அந்தக் குடியிருப்புகளை உருவாக்குகின்ற முயற்சியில் தன்னை

2001 செப்டம்பர் 13]

ஈடுபடுத்திக்கொள்ள உள்ளார் என்ற செய்தியை அறிந்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாறி மாறி நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி?*

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: *தலைவர் அவர்களே,....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. உசேன், இது குறுகிய கால வினா.*

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: *தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினாவில் மற்றவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. அவருடைய தொகுதி ஆர்.கே. நகர். அவர் ஆர்.கே. நகர் தொகுதிக்குக் கேட்டிருக்கிறார். ஆயிரம் விளக்குக்கு நீங்கள் தனியாகக் கேள்வி போடுங்கள். குறுகிய கால வினா இது. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

வால்பாறை மஹாவீர் ஹை ஃபாரெஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோவை மாவட்டம், வால்பாறை மஹாவீர் ஹை ஃபாரெஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து கவன ஈர்ப்பாக திரு. கோவை தங்கம் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு நான் அனுமதியளிக்கிறேன். அறிவிப்பை சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன், திரு. கோவை தங்கம்.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை ஹைஃபாரெஸ்ட் எஸ்டேட் நிர்[illegible]கத்தால் கடந்த 10 மாதமாக அங்கே பணிபுரிந்து வருகின்ற தொழி[illegible]ர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. சம்பள உயர்வும் வழங்கப்ப[illegible]வில்லை, ஓயவூதியமும்*